**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC )

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 157/2016 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 4 |
| Name | : | வீரதேவ ஜாட்டி, வயது 52 |
| Father Name/Husband Name | : | மாசிலாமணி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 28th day of April 2026.

**(A1 present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்பு கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் குற்ற பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த 11.12.2014 ஆம் தேதி 11.30 மணிக்கு நான் குற்றபிரிவில் பொறுப்பில் இருக்கும் போது கோவில்பட்டி, புதுகிராமம், 2 வது தெருவைச் சேர்ந்த கருப்பசாமி மனைவி காளீஸ்வரி, வயது 33 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.1280/2014 இ.த.ச. பிரிவுகள் 420, 506(1) ஆக வழக்கு பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**3.** 2011–2012 காலகட்டத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் துலங்காது என்றால் சரிதான். 20.11.2014 ல் மிரட்டியதாக கூறப்படும் வழக்கு சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் அன்றைய தினமோ, 11.12.2014 ற்கு முன்பாகவோ, இடைப்பட்ட காலத்தில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக அ.சா.ஆ.1 புகார்மனுவில் துலங்காது என்றால் நான் பொறுப்பில் இருந்தபோது அவ்வாறு புகார் எதுவும் பெறப்படவில்லை. 21 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்தற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் துலங்காது என்றால் சரிதான்.

4. அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் ரூ.1 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் மட்டும் கொடுத்ததாகவும் துலங்கும் என்றும், மீதி ரூ.2 லட்சம் கொடுத்தாக துலங்காது என்று சொன்னால் 2013 ஆம் ஆண்டு ஜீலை முதல் சிறுக சிறுக சேர்த்து வைத்த பணம் சில தவணைகளாக ரூ.1 லட்சம், ரூ.2 லட்சமாக மொத்தம் ரூ.5 லட்சமாக புகார் கொடுக்கும் வரை கொடுக்கபட்டது. மேற்படி விவரங்கள் புகார்மனுவில் துலங்காது என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் கரூரை சேர்ந்த சிறப்பு சாமியார் பூஜை பரிகாரம் செய்தார் என்றும், எங்கள் ஏரியா சேர்ந்த நபர்கள் மொத்தமாக சேர்ந்து பணம் கொடுத்தோம் என்றும் துலங்குமா என்றால் துலங்காது.

5. 2011 –2012 காலகட்டத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றது என்றும், 2011 –2012 காலகட்டத்தில் புகார் கொடுத்ததாக புகார்மனுவில் துலங்காது என்றும் சொன்னால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்ததாக துலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1 கொடுத்த புகார்மனுவில் புகார் கொடுக்கும்போது வழக்கு சொத்துக்கள் ஒப்படைத்ததாக துலங்குமா என்றால் துலங்காது. 2013 ஆம் ஆண்டு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக உள்ள நிலையில் ஒரு வருடம் கழித்துதான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான், எதிரிகளிடம் பணம் கேட்க அ.சா.1 சென்றபோது 20.11.2014 அன்று எதிரிகள் மிரட்டியதால் புகார் கொடுக்கப்பட்டது. 20.11.2014 அன்று மிரட்டியதாக சொல்லப்படும் சம்பவம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் புகாரில் அந்த விவரம் துலங்காது.

6. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறாத நிலையில் புகார்மனுவை உற்பத்தி செய்ய நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை ஆய்வாளர் திரு. தர்மராஜ்தான் முதலில் விசாரித்தார் என்றால் சரிதான். மேற்படி ஆய்வாளரை விசாரித்தால் இவ்வழக்கு சம்பவம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி ஆய்வாளர் மேற்கொண்ட விசாரணைகள் இவ்வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அது சம்பந்தமான ஆவணங்கள் மறைக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் அ.சா.1 விடம் வழக்கிற்காக பொய் புகார் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 2011 – 2012 காலகட்டத்தில் கொடுக்கப்பட்ட புகார் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கரூரைச் சேர்ந்த சாமியார்தான் அ.சா.1 விடம் பணம் பெற்று ஏமாற்றிவிட்டார்

என்றும், அவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால்தான் 1வது எதிரி மீது வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.